2026 மார்ச் மாதம் 26- ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 49/2025

2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26- ஆம் தேதி வியாழக்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW11 (LW14) - சண்முகம் |
| தகப்பனார் பெயர்: | பெருமாள் |
| ஊர்: | எர்மாடு |
| வட்டம்: | பந்தலூர் |
| மாவட்டம்: | நீலகிரி |
| தொழில்: | காவல் ஆய்வாளர், எர்மாடு காவல்நிலையம் |
| வயது : | 51 |

26.03.2026

(எதிரி ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS -ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. 1, 4 எதிரிகள் PT Warrant மூலம் ஆஜர்படுத்தப்பட்டனர்).

(சாட்சி அழைக்கப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது நீலகிரி மாவட்டம், எர்மாடு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 10.01.2025ம் தேதி தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது காவல் நிலைய குற்ற எண்.424/2024 பிரிவுகள் 296 பி, 118(1), 125, 109(1), 351(3) BNS and 4 of TNPHW Act -ன்படியான வழக்கில் வழக்குக் கோப்பினை எனக்கு முந்தைய காவல் ஆய்வாளர் திருமதி.ராமலட்சுமி என்பவர் புலன் விசாரணை செய்து, அவர் மேல்விசாரணைக்காக வழக்குக் கோப்பினை

ஒப்படைத்ததை பெற்று நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். நான் அன்றைய தினம் வழக்கின் சம்பவ இடம் சென்று, சம்பவ இடத்தை பார்வையிட்ட போது, முந்தைய ஆய்வாளர் பதிவு செய்திருந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அதே போன்றே இருந்ததால் நான் தனியாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை.

2. மேலும், முந்தைய ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் விசாரணை செய்தபோது, அவரிடம் அளித்த வாக்குமூலம் போன்றே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை. பின்பு 21.01.2025 ம் தேதி வழக்கின் கண்ட சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தும், அதற்கு R.P.R.No.3/2025 பெறப்பட்டது, பின்பு, 24.02.2025 ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட வசந்தா மற்றும் பாண்டி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த தேனி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திருமதி.சுகந்தி என்பவரை விசாரித்தும், காயச்சான்றிதழ் பெற்றும், பின்பு வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. வசந்தா என்பவருக்கு காயங்கள் சாதாரண காயங்கள் என்றும், பாண்டி என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்றும் மருத்துவர் கருத்துரை கொடுத்ததால் அன்றைய தினம் வழக்கின் சட்டப்பிரிவுகளை 296 பி, 118(1), 125, 109(1), 351(3) BNS and 4 of TNPHW Act லிருந்து 296 பி, 118(1), 125, 109(1), 351(3), 118(2) BNS and 4 of TNPHW Act என்று பிரிவுகள் மாற்றம் செய்து, சட்டப்பிரிவுகள் மாறுதல் அறிக்கையினை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். என்னிடம் காட்டப்படும் சட்டப்பிரிவுகள் மாறுதல் அறிக்கை நான் தயார் செய்தது தான். அது **அ.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. பின்பு எனக்கு முந்தைய ஆய்வாளர் திருமதி.ராமலட்சுமி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் வழக்கின் புலன் விசாரணை முடித்து, எதிரி மீது 296 பி, 118(1), 125, 109(1), 351(3), 118(2) BNS and 4 of TNPHW Act –ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். இந்த எதிரி

ஏற்கனவே குற்ற எண்.823/2017, S.C.No.71/2018 இ.த.ச பிரிவுகள் 429 (4 Counts), 436, 302 (2 Counts), 326 (1 count) and 332 (2 Counts) என்ற வழக்கில் ஆயுள் தண்டனை அடைந்தும், தண்டனை பெற்றுள்ளார் என்ற விபரத்தினை நீதிமன்ற கவனத்திற்கு சமர்ப்பிக்கிறேன். அந்த S.C.No.71/2018 வழக்கின் 16.12.2024 ம் தேதியிட்ட தீர்ப்பு நகல் **அ.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி அடிக்கடி இவ்வாறு குற்றங்களில் ஈடுபட்டு வருவதால் அவருக்கு அதிகபட்ச தண்டனை கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

5. இந்த வழக்கில் நான் மருத்துவரை தவிர மற்ற சாட்சிகளிடம் மறுவாக்குமூலங்கள் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னவாறு முந்தைய ஆய்வாளரிடம் கூறியதுபோல் என்னிடமும் சாட்சிகள் வாக்குமூலம் கூறியதால் நான் தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்பதற்கு ஆவணங்கள் எழுதி பதிவு செய்துள்ளேனா என்றால் விசாரித்தேன், பதிவு செய்யவில்லை. நான் வாய்மொழியாக விசாரித்தேன் என்றால் சரிதான்.

6. வழக்குக் கோப்பினை என்னிடம் யார், எத்தனை மணிக்கு ஒப்படைத்தார் என்றால் 10.01.2025 ம் தேதி காவல்நிலைய காவல் ஆய்வாளர் திருமதி.ராமலட்சுமி என்பவர் ஒப்படைத்தார், காலை சுமார் 10 மணி இருக்கும். நான் அப்போது அந்த காவல்நிலையத்தில் பொறுப்பு காவல் ஆய்வாளராக இருந்தேனா என்றால் நான் தான் காவல் ஆய்வாளர் ஆவேன், திருமதி.ராமலட்சுமி பொறுப்பு காவல் ஆய்வாளராக இருந்தார். 24.02.2025 ம் தேதி மருத்துவரை விசாரித்தப் போது பாண்டி என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்றும், வசந்தா என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து கருத்துரை வழங்க இயலாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. எனது விசாரணையில் மருத்துவர் எந்த ஆயுதத்தால் காயங்கள் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் கத்தியால் குத்தி தாக்கிவிட்டதாக கூறி வாக்குமூலம் அளித்துள்ளார். மருத்துவர் விசாரணையில் கத்தியால் குத்தி காயங்கள் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற வசந்தா என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிராய்ப்பு காயங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவரை நான் எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் சுமார் 10 மணியிலிருந்து 02 மணிக்குள் இருக்கும்.

8. சட்டப்பிரிவுகள் மாறுதல் அறிக்கை 24.02.2025ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அன்றைய தேதியிலேயே தயார் செய்து, தாக்கல் செய்தேன். சட்டப்பிரிவுகள் மாறுதல் அறிக்கையில் நேரம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் 24.02.2025 என்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது, நேரம் குறிப்பிடப்படவில்லை. நான் எத்தனை மணிக்கு எந்த காவலர் மூலம் சட்டப்பிரிவுகள் மாறுதல் அறிக்கையினை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் நீதிமன்ற காவலர் மூலம் அனுப்பி வைத்தேன், பெயர் ஞாபகமில்லை, அன்றைய பொது நாட்குறிப்பை பார்த்தேன் தெரியும், குறிப்பிட்டுள்ளேன். அந்த பொதுநாட்குறிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்ற உத்தரவின்பேரில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

9. மருத்துவர் காயச்சான்றிதழை அன்றைய தேதியில் கொடுத்தாரா அல்லது ஒருவாரம் கழித்து கொடுத்தாரா என்றால் மருத்துவரை விசாரித்த தேதியில் காயச்சான்றிதழ் கொடுக்கப்பட்டுள்ளது. மருத்துவர் கொடுத்த காயச்சான்றிதழ் அடிப்படையில் சட்டப்பிரிவுகள் மாறுதல் அறிக்கையை தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த போது, எதிரிக்கு S.C.No.71/2018 வழக்கில் தண்டனை கொடுக்கப்பட்டது என்றால் அந்த வழக்கின் கோப்பை பார்வையிட்டால் சரியாக தெரியவரும். இந்த வழக்கில் காயம்பட்ட

சாட்சிகளுக்கும், S.C.No.71/2018 வழக்கில் இறந்த நபர்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றால் சாட்சிகளின் வாக்குமூலங்கள் படி சம்பந்தமில்லை, ஆனால் முன்விரோதம் இருந்தது.

10. இந்த வழக்கில் இந்த எதிரிக்கும் புகார்தாரர்களுக்கும் ஏற்கனவே புகை மூட்டல் தொடர்பாக பிரச்சனை இருந்த விபரத்தை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். புகை மூட்டல் சம்பந்தமான புகாரில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த வழக்கு ஆவணங்களை பார்வையிட்டால் சொல்லமுடியும். எனது விசாரணையில் இந்த வழக்கில் காயம்பட்ட பாண்டி என்பவருக்கு இருதய ஆஞ்சியோபிளாஸ்ட் செய்த விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது. இவ்வழக்கில் ஏற்பட்ட காயங்களினால் பாண்டி என்பவர் இறக்கவில்லை என்றாலும், அவருக்கு இருதய ஆஞ்சியோபிளாஸ்ட் செய்ததால் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

11. இந்த வழக்கில் சாட்சிகளையோ, சம்பவ சாட்சிகளையோ, காயம்பட்ட நபர்களையோ முறையாக விசாரிக்காமல் ஏற்கனவே இருந்த முன்விரோதத்தின் காரணமாக பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு வழக்குச் சொத்து கத்தியால் பாண்டியனுக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் காயம்பட்ட நபர்கள் வேறு நபர்கள் என்றாலும், S.C.No.71/2018 வழக்கில் இறந்த நபர்கள் வேறு நபர்கள் என்றாலும், இரு வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. சம்பவத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரி விடுவிடுக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 26.03.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.26 16:20:18 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
26.03.2026